புதிய தலைமுறை அறக்கட்டளை

[இளைஞர் திறன் மேம்பாடு மற்றும் கிராமப்புறக் கல்விக்காக பணியாற்றும் ஓர் அரசு சாரா தொண்டு நிறுவனம்]

Forum For Micro & Small Enterprises (A Unit of Puthiya Thalaimurai Foundation) சுயதொழில் மன்றம்

FORUM FOR MICRO & SMALL ENTERPRISES
(A Unit of Puthiya Thalaimurai Foundation)
சுயதொழில் மன்றம்
www.microenterprises-ptf.org

ISO 9001:2008 Certified by IRQS | MGMT. SYS. RvA C 071

ISO 9001:2008 Certified

# ஏற்றுமதி & இறக்குமதி - நடைமுறைகளும் & மின்னனு ஆவணமாக்கலும் - ஒருநாள் கருத்தரங்கம்

# EXPORT & IMPORT - PROCEDURES & E-DOCUMENTATION - ONE-DAY SEMINAR

## நாள்: 26.03.2017, ஞாயிற்றுக்கிழமை | இடம்: SRM University, வடபழனி, சென்னை

புதிய தலைமுறை அறக்கட்டளை சுயதொழில் மன்றத்தின் மூலம் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி - நடைமுறைகள் & மின்னனு ஆவணமாக்கலும் குறித்த ஒருநாள் கருத்தரங்கம் மார்ச் 26, 2017 ஞாயிற்றுகிழமை அன்று சென்னை வடபழனியில் உள்ள SRM பல்கலைகழகத்தில் நடைபெற்றது.

காலை 10.00 மணியளவில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கி மாலை 5.30 மணிவரை நடைபெற்றது. ச.சுரேஷ்கண்ணன், Project Lead, புதிய தலைமுறை அறக்கட்டளை வரவேற்புரை வழங்கினார். அதனை தொடர்ந்து புதிய தலைமுறை அறக்கட்டளையின் செயலாளர் திரு. து.வே.வேங்கடகிரி சுயதொழில் மன்றத்தின் செயல்பாடுகள், இதுவரை நடத்தியுள்ள நிகழ்ச்சிகள் குறித்தும் சுயதொழில் வாய்ப்புகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

பின்னர் திரு. K.S. கமாலுதீன், Managing Director, Bluebharath Exim Pvt. Ltd, சென்னை அவர்கள் ஏற்றுமதிக்கான பொருட்களை தேர்ந்து எடுக்கும் வழிமுறைகள், ஏற்றுமதி செய்வதற்கு நாடுகளை தேர்ந்து எடுக்கும் முறைகள், சிறு மற்றும் குறுதொழில் வளர்ச்சி நிலையம் (மத்திய அரசு நிறுவனம்) குறித்த தகவல்கள் மற்றும் ஏற்றுமதி செய்வதற்கான அரசின் மானியத்தினை பெறும் வழிமுறைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். இந்த முகாமில் ஏற்றுமதி & இறக்குமதி தொழில் குறித்த அடிப்படை தகவல்கள், IE Code பெறும் வழிமுறைகள், விற்பனை வரி TIN No/ VAT NO பெறும் வழிமுறைகள்,









இறக்குமதியாளரை அடையாளம் காணும் வழிமுறைகள், ஏற்றுமதி சந்தை, ஏற்றுமதிக்கானஆணைகளை பெறும் வழிமுறைகள், நிறுவனத்தை பதிவு செய்யும் வழிமுறைகள், ஏற்றுமதி ஆணைக்கான லைசென்ஸ் கடன் / வசதி குறித்த விவரங்கள், ஏற்றுமதிக்கு தேவையான ஆவணங்களை தயார் செய்யும் வழிமுறைகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார். பின்னர் ஒரு தொழிலை தொடங்க வேண்டுமானால் முறையான திட்டமிடல் வேண்டும் என்றும் வங்கியின் மூலம் பொருட்களுக்கான உண்டான தொகையினை பெறும் வழிமுறைகள், பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்தல் குறித்தும் கூறினார். Export & Import Promotion Council இன் பணிகள் மற்றும் அதில் உறுப்பினராகும் வழிமுறைகள் மற்றும் அதன் மூலம் கிடைக்கும் பயன்கள் மற்றும் பொருட்களை வெளிநாடுகளுக்கு கப்பல் மற்றும் விமானம் மூலம் அனுப்பி வைக்கும் வழிமுறைகள் குறித்தும் மிகத்தெளிவாக எடுத்துரைத்தார்.

நிகழ்ச்சியில் சிறப்பம்சமாக EverGreen Agencies, Chennai பாக்கு மட்டை தட்டு உற்பத்தி செய்யும் நிறுவனத்தின் சார்பில் பாக்கு மட்டை தட்டுகள், சென்னையில் உள்ள Handiskill Handicrafts நிறுவனத்தின் சார்பில் கைவினைப்பொருட்கள் மற்றும் பெங்களுரைச் சேர்ந்த V.N. Exports நிறுவனத்தின் சார்பில் அழகு பொருட்கள், பொம்மைகள் போன்றவற்றினை சுயதொழில் முனைவோர்களின் பார்வைக்காக காட்சிபடுத்தியருந்தனர்.

இவை அனைத்தையும் சுயதொழில் முனைவோர்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டு தொழில் குறித்த தகவல்களை கேட்டறிந்தனர். மேலும் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள Sathyam Enterprises என்ற நிறுவனத்தின் மூலம் தேங்காய் மற்றும் மாங்காய் விற்பனை செய்துவரும் மாதையன் கூறுகையில் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டதன் மூலம் ஏற்றுமதி செய்யும் வழிமுறைகள் குறித்து மிகச்சிறப்பாக கமாலுதீன் அவர்கள் விளக்கம் அளித்ததாகவும் இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து கொடுத்த புதிய தலைமுறை அறக்கட்டளைக்கு தனது நன்றியை தெரிவித்து கொண்டார். இம்முகாமில் 150க்கும் மேற்பட்ட சுயதொழில் முனைவோர்கள் கலந்து கொண்டனர்.



கைவினைப்பொருட்களை சுயதொழில் முனைவோர்கள் ஆர்வமுடன் பார்வையிடும் காட்சி



பாக்கு மட்டை தட்டு தொழில் குறித்து சுயதொழில் முனைவோர்கள் கேட்டறிந்த காட்சி



கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினர்



K.S. கமாலுதீன், Managing Director, Bluebharath Exim Pvt. Ltd, சென்னை அவர்கள் ஏற்றுமதி & இறக்குமதி தொழில் குறித்த தகவல்களை விளக்கிய காட்சி